பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 30 திங்கட்கிழமை 14.07.2025 கதிர் 247

## இனி இது ரகசியம் அல்ல!

ஈபிஆர்எல்எவ் கட்சியின் முன்னாள் தலைவர் வரதராஜப் பெருமாளை வாசகர்களில் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். அவரைப்பற்றித் தெரியாதவர்களுக்காக ஒருசிறு ☞ 2

# பொலிஸ் புலனாய்வாளர்கள் என கூறப்பட்டவர்களால் தாக்கப்பட்ட நபர் காயங்களுடன் வைத்தியசாலையில்

## சந்தேகநபர்கள் குறித்த படங்கள் இருந்தும் இதுவரையில் எவரும் கைதாகவில்லை



பலத்த அடிகாயங்களுடன் பளை-வண்ணான்கேணியைச் சேர்ந்த சிறீதரன் காந்தன் என்ற நபர் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட நால்வரே தன்னைத் தாக்கினர் என்று அவர் குற்றஞ்சாட்டுகின்றார். சந்தேகநபர்களில் இருவர் பொலிஸ் என எழுதப்பட்ட நீலநிறத்தில் வெள்ளைக் கோடிட்ட பொலிஸார் அணியும் ஆடையை ஒத்த ஆடையை அணிந்திருந்தனர் என்றும் தெரிவிக்கிறார்.

தன்னைப் பலாத்காரமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற அவர்கள் தன்னைத் தாக்கிவிட்டு காயங்களுடன் இடைநடுவில் இறக்கிவிட்டுச் சென்றனர் என்றும் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவர் தெரிவித்தார்.

தனது நண்பர் ஒருவர் முகநூலில் விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பில் பதிவிட்டது தொடர்பில் தன்னிடம் விசாரணை நடத்தவேண்டும் என்று அவர்கள் அழைத்தனர் என்றும் அவரகளுட ன் செல்லத் தான் ☞ 2

## தமிழர் இன விடுதலை அறப் போராட்டத்தில் சம்பந்தனின் இழப்பு இட்டு நிரப்ப முடியாதது

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

அரசியல் முதிர்ச்சியும், சாணக்கியமும், எல்லாத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் தலைமைத்துவ ஆளுமையும் மிக்கவராக, தன் இறுதிக்கணம் வரை தமிழ்த்தேசியத் தளத்தில் பயணித்த அரசியல்வாதியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமாகிய இராஜவரோதயம் சம்பந்தன் வெற்றிடம், ஈழத்தமிழர்களின் இனவிடுதலை நோக்கிய அறவழிப் போராட்டப் பயணத்தில் காலவெளியால் நிரப்ப முடியாத வெற்றிடம் என நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவருமான சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ☞ 2

## மலையக தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வுக்கு விரைவில் தீர்வு

### பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விவகாரத்தில் அரசுத் தலைவர் நேரில் தலையிட்டு வெகுவிரைவில் தீர்வை வழங்குவார் என்று தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவித்தார்.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக (2022) ஹட்டன் கல்வி வலய ☞ 3

## கழிவுகளைத் தரம்பிரிக்கும் நிலையத்தை அரியாலை கிழக்கில் அமைக்க எதிர்ப்பு

அரியாலை கிழக்கு - காரைமுனங்கு பகுதியில் திண்மக்கழிவுகளைத் தரம்பிரிக்கும் நிலையத்தை அமைக்கும் திட்டத்தை நிறுத்துமாறு அரியாலை கிழக்கு மற்றும் அரியாலை வாழ் மக்கள்,பொது அமைப்புகள் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி ஆகிய பகுதியைச் சேர்ந்த மக்களாகிய நாம், காரைமுனங்கு பகுதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள திண்மக்கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கும் திட்டத்தினை இரத்துச் செய்யுமாறு கீழ்வரும் விடயங்களை முன்னிறுத்தி தாழ்மையாக வேண்டுகிறோம்.

இச் செயல்திட்டம் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் தேசியக் கொள்கையினையும், தேசியமக்கள்சக்தியின் தேர்தல்வாக்குறுதிகளையும் மீறுவதாக உள்ளது. என்றும் பசுமையான வாழ்க்கையுடனான நிலைபேறான உயிர்சார் உலகத்தினை உறுதிசெய்வதான ☞ 3

## புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் கிழக்கு மாகாணத்தில் பிரதமர் ஆய்வு

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக மாகாண, பிராந்திய மற்றும் பிரதேச மட்டத்திலான கல்வி மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கிழக்கு மாகாணத்திற்கான விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்று ☞ 2

## வினைத்திறனான அரச சேவையை உருவாக்க யுஎன்டிபி முழு ஆதரவு

வினைத்திறனான அரசசேவையை உருவாக்குவதற்காக ஆளும்தரப்பால் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா (Azusa Kubota) தெரிவித்தார். ☞ 2

### பலாலி கிழக்கு இராஜேஸ்வரி அம்மன்

## ஆலயத்தில் வழிபாடு குறித்து மாத இறுதிக்குள் நிரந்தர தீர்வு

பலாலி கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை பொதுமக்கள் வழிபாடு செய்வதற்கான நிரந்தர தீர்வினை இம்மாத இறுதிக்குள் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர் பார்ப்பதாக யாழ். மாவட்ட ☞ 2

# போர்க் குற்றங்கள், இனப்படுகொலை குறித்து ஒட்டுமொத்த விசாரணை மட்டுமே வேண்டும்

## தனித் தனியான விசாரணைகள் வேண்டாம் என்கிறார் கஜேந்திரகுமார்
## முன்னுக்குப் பின் முரணாக தமிழ் அரசு செயற்படுதாகவும் குற்றச்சாட்டு

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடந்தால் அது ஒட்டுமொத்தமாகவே விசாரிக்கப்படவேண்டும், செம்மணி, இறுதிப் போர்க் குற்றங்கள் என்று தனித் தனியாக விசாரிக்கப்படக்கூடாது. போர்க்குற்றங்கள், இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை கோரிய தமிழ் அரசுக் கட்சி அண்மையில் அரசுத் தலைவர் அநுரவுக்கு எழுதிய கடிதத்தில் உள்ளக விசாரணைக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இது முற்றிலும் முரணானது என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

2021 ஜனவரி மாதம் அனைத்துத் தமிழ்க் கட்சிகள் சிலவும் சிவில் சமூக அமைப்புகளும் செயற்பாட்டாளர்களும் கையொப்பமிட்டு ஐநா மட்டத்தில் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் தேசத்தின் மீது நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை, போர் குற்றங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்று ஒரு கடிதம் எழுதினோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கையின் சம்மதம் இல்லாமல் ☞ 3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அறிமுகம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் முதலாவதும் கடைசியுமான முதலமைச்சர். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் வடக்கு மாகாண சபையையும் தமிழீழ விடுதலைப் புலிகளும் முக்கிய தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட தரப்புக்களும் முற்றிலுமாக எதிர்த்து நின்றபோது, இந்தியாவுடன் சேர்ந்து நின்று முதலாவது வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரானவர்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து அப்போது அமைதி காக்கும் படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்திருந்த இந்தியப் படையினர் 1989ஆம் ஆண்டு வெளியேறியபோது தமிழீழப் பிரகடனம் செய்துவிட்டு அவர்களுடனேயே கப்பலில் ஏறி ஓடிப்போனவர். அதன் பின்னர் இந்தியாவின் வடமாநிலம் ஒன்றில் குடும்பம், குழந்தைகள் என்று செட்டில் ஆகிவிட்டவர். இன்றும் அவர் இந்தியவாசிதான்.

போர் முடிந்த பின்னர் ஆடிக்கொருக்கால் அமாவாசைக்கு ஒருக்கால் என்று இந்தப் பக்கம் எட்டிப் பார்ப்பது அவரது வழமை. நீண்ட பல மாதங்களின் பின்னர் இப்போதும் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். நேற்று அவரது முன்னாள் நண்பரும் அண்மைக் காலம் வரையிலும் பரம எதிரியாகவும் இருந்தவரான சுரேஸ் பிரேமச்சந்திரனைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

என்பிபி ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு முயற்சியைத் தொடங்கும் வரைக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து மாகாண சபைகள் முறைமையைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு அனைத்துத் தமிழ்க் கட்சியினரையும் சந்தித்துப் பேசவுள்ளாராம் அவர். இந்த முயற்சியில் அவர் ஈடுபடுவது இதுவொன்றும் முதல் தடவையல்ல. இதற்கும் முன்னர் ஒரு தடவை வந்தபோதும் அவர் இப்படிச் சொல்லிக்கொண்டுதான் சுற்றித் திரிந்தார். ஆனால், அதன் பெறுபேறு என்னவென்று அவருக்கு மட்டும்தான் தெரியும். இப்போது மீண்டும் வந்திருக்கிறார். கேட்டால் இந்திய அரசின் ஏவலில் தான் வரவில்லை என்று நிச்சயமாக அடித்துச் சத்தியம் செய்வார்.

ஈபிர்எல்எவ் கட்சியை சுரேஸ் பிரேமச்சந்திரன் வழக்குப் போட்டுத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டதை அடுத்து, அவரது ஆதரவாளர்களாக யாழ்ப்பாணத்தில் எஞ்சியிருந்த சிலர், வரதர் அணி என்று கூறிச் செயற்பட்டு வந்தனர். பின்னர் 'சமூக ஜனநாயகக கட்சி' என்ற பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகத் தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றனர். இந்தக் கட்சியின் செயலாளர் கிருபாவுடனும் மற்றும்இரு உறுப்பினர்களுடனும்தான் நேற்று ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் இல்லத்துக்குச் சென்றிருந்தார் வரதர். சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரர் சர்வேஸ்வரன் மற்றும் அக்கட்சியின் இரு உறுப்பினர்களும் சந்திப்பில் உடனிருந்தனர்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த வலியுறுத்தியும், பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரியும் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் அதற்கு ஆதரவான சக்திகள் ஒன்றிணைந்து ஒரு பரப்புரை இயக்கத்தை உருவாக்குவது தொடர்பான ஆரம்ப உரையாடலாக இது அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வேலைத் திட்டத்திற்குள் இந்த விடயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருப்பதை சுரேஸ் பிரேமச்சந்திரன் பதிலுக்குக் குறிப்பிட்டார் என்றும் இணைந்து செயல்படலாம் என்று தெரிவித்தார் என்றும்கூடத் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறையாவது தனது நலன்களுக்காக மட்டுமே தமிழ்க் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் இந்தியக் கனவு பலிக்கிறதா என்று பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுத்தபோது தன்னைப் பலவந்தமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று தாக்கினர் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

சனிக்கிழமை அவர் தாக்கப்பட்டுள்ளார். நேற்றிரவு வரையில் சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. பளைப்பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்தி வருகின்றனர். பாதிக்கப்பட்டவர் ஹெல்மெட் அணிந்த நான்கு பேரால் தடிகளால் தாக்கப்பட்டு மோட்டார் சைக்கிளில் ஏற்றப்படும் ஒளிப்படங்களும் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன.

## ஆலயத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழு தலைவரும் கடற்தொழிலில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை முழுமையாக பொதுமக்கள் வழிபடுவதற்கான ஏற்பாடுகள் ஏன் மேற்கொள்ளப்படவில்லை என அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசாங்கம் பொறுப்பேற்ற பின் பல தசாப்த காலமாக பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்படாமல் இருந்த யாழ். பலாலி வீதியை பொது மக்களின் பாவனைக்காக திறந்து விட்டோம்.

அதேபோன்று பலாலி கிழக்கு இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை முழுமையாக பொதுமக்கள் சென்று வழிபடக்கூடிய வகையில் எமது அரசாங்கம் இம் மாத இறுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஏனெனில் குறித்த ஆலயம் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் பல தசாப்த காலமாக சிக்குண்ட ஆலயமாக காணப்படுகின்ற நிலையில் அதனை உரிய முறையில் மக்களிடம் கையளிக்க வேண்டும்.

எமது அரசாங்கத்தை பொறுத்தவரையில் எந்த ஒரு இனத்தினுடைய வழிபாட்டு உரிமையையும் புறந்தள்ளும் விதமாக செயற்படும் அரசாங்கம் கிடையாது.

ஆகவே குறித்த ஆலயத்தை முழுமையாக மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்று வருகின்ற நிலையில் விரைவில் அதனை மக்களிடம் முழுமையாக கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய கல்விச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண கல்வி திணைக்கள கேட்போர் கூடத்தில் பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதைய கல்வி முறையில் மாற்றம் தேவை எனவும், பாடசாலைகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

ஆசிரியர் அதிபர் மற்றும் கல்வி நிர்வாக வெற்றிடங்கள் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் காணப்படுவதாகவும், அவை தீர்க்கப்பட வேண்டும் என்றும், இந்தக் கல்விச் சீர்திருத்தத்தை தனியாக பார்க்காமல் முழுமையான செயல்முறையாகப் பார்க்க வேண்டும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் புதிய சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு ஆசிரியர்கள் மட்டுமல்ல, நிர்வாகத் துறை மற்றும் பெற்றோர்களின் ஆதரவும் அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் பாடத்திட்ட திருத்தங்கள், மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு முறை, உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், ஆசிரியர்- அதிபர் மற்றும் கல்வி நிர்வாக வெற்றிடங்களை குறைத்தல், மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையிலான முறையான ஒருங்கிணைப்பு, மாகாண சபை மட்டத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## வினைத்திறனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திகா சனத் குமாநாயக்கவை சந்தித்தபோது அசுசா குபோடா இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் பயனுள்ள அரச சேவைகளை வழங்குவதற்காக உள் விவகார அலகுகளை (Internal Affairs Unit - IAU-) நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள் மேலும் மேம்படுத்துவது மற்றும் பணியாளர் பயிற்சிக்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்திலிருந்து கூடுதல் ஆதரவைப் பெறுவது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

இந்த அலகுகளை நிறுவுவது ஊழலைத் தடுக்கவும் அரசு நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும் நெறிமுறை நிர்வாகத்தை ஊக்குவிக்கவும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுடன் இணைந்து சட்ட அமுலாக்கத்தில் உதவவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச அதிகாரிகளின் நெறிமுறை நடத்தையை மேம்படுத்துவதன் மூலம் அரசு நிறுவனங்களுக்குள் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. அந்த திட்டங்களுக்கு ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அசுசா குபோடா அரசுத் தலைவர்யின் செயலாளரிடம் உறுதியளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் சர்வதேச நிபுணரும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இஸ்தான்புல் ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தின் தலைவருமான டிராகோ கோஸ் மற்றும் ஊழல் எதிர்ப்பு நிபுணர் தம்மிக தசநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை ராணுவம் மீது சுமத்த முயற்சி

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

இராணுவத்தினரே குண்டுத்தாக்குதலை நடத்தினர் என்று பிள்ளையான் ஊடாக வாய்மூல சாட்சியத்தை பெறவே இந்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. அசாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியமாக மாற்றிக் கொண்டு குண்டுத்தாக்குதலை இராணுவத்தின் மீது சுமத்தவே அரசதரப்பு எதிர்பார்க்கிறது. குண்டுத்தாக்குதல்கள் பற்றி பிள்ளையான் ஏதும் குறிப்பிடவில்லை. அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

தமிழ் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. தமிழ் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலை புலிகளில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானை பலிகொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக முன்னிலையாகியுள்ளேன் எனவும் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை பிள்ளையான் சிறையில் இருந்தவாறே முன்கூட்டியதாகவே அறிந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு வருமாறு குறிப்பிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால 2025.04.10 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் 'தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய பல விடயங்களை விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளதாக' தெரிவித்தார். இதனை நம்பி அரசுத் தலைவர் யும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துதாக குறிப்பிட்டார்.

பிள்ளையானை நான் சிறையில் சென்று சந்தித்தேன். குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையானிடம் விசாரணை அதிகாரிகள் ஏதும் கேட்கவுமில்லை, அவரும் ஏதும் குறிப்பிடவுமில்லை. ஆகவே அமைச்சர் ஆனந்த விஜேபால பொய்யுரைத்தார் என்பதை ஊடகங்களுக்கு குறிப்பிட்டேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துக்காக பிள்ளையான் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடுவது பொய், அவ்வாறு குறிப்பிடுபவர்களுக்கு பைத்தியம். கிழக்கு பல்கலைக்கழகத்தில் உபவேந்தரை கடத்தி, காணாமலாக்கிய சம்பவத்துக்காகவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அமைச்சர் சுனில் அந்துனெத்தி குறிப்பிட்டிருந்தார். ஆகவே சுனில் அந்துனெத்தி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும், அரசுத் தலைவர் க்கும் பதிலளித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த அண்மையில் நாடாளுமன்றத்தில் பிள்ளையான் பற்றி குறிப்பிட்டது முற்றிலும் பொய்யானது. பிள்ளையான் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பிள்ளையான் தமிழ் மொழியில் வழங்கிய வாக்குமூலத்தின் பிரதியை பொலிஸார் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தமிழ் மொழிமூல வாக்குமூலம் ஆங்கில மொழிக்கு மொழிப்பெயர்க்கப்பட்டு எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த வாக்குமூலத்தில் எவ்விடத்திலும் குண்டுத்தாக்குதல்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை. உபவேந்தர் காணாமலாக்கப்பட்ட சம்பவம் பற்றியே கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

தமிழ் பிரிவினைவாதிகளின் நிதியை இந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. தமிழ் பிரிவினைவாதிகளை மகிழ்விப்பதற்கு விடுதலை புலிகளில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானை பலிகொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. நன்றிக்கடன் நிமித்தமே பிள்ளையானுக்காக முன்னிலையாகியுள்ளேன்.

இராணுவத்தினரே குண்டுத்தாக்குதலை நடத்தினர் என்று பிள்ளையான் ஊடாக வாய்மூல சாட்சியத்தை பெறவே இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அசாத் மௌலானாவை அரச தரப்பு சாட்சியமாக மாற்றிக் கொண்டு குண்டுத்தாக்குதலை இராணுவத்தின் மீது சுமத்தவே அரசாங்கம் முயற்சிக்கிறது. குண்டுத்தாக்குதல்கள் பற்றி பிள்ளையான் ஏதும் குறிப்பிடவில்லை. அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது என்றார்.

## தமிழர் இன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் கட்சியின் மாவட்டக் கிளைப் பணிமனையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முதலாம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து, நினைவுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் உறுப்பினரும், ஆசிரியருமான அருணாசலம் சத்தியானந்தம், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உப தலைவரும் மேனாள் கல்வி அமைச்சருமான தம்பிராஜா குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றியிருந்ததுடன், மாவட்டக் கிளையின் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், மேனாள் உறுப்பினர்கள், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் வட்டாரக்கிளைகளின் நிருவாக உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிக் கல்வி பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற மாயழகு சந்திரலேகா கிங்ஸ்லி (ளுடுநுயுளு உடயளள ஐ) அவர்களின் பணிநயப்பு விழா கொட்டகலை ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் கொட்டகலையில் நடாத்தப்பட்டது.

கலாசாலை அதிபர் பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இ கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் மாணவரும் இ யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

கல்வி வெளியீட்டுத் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் முரளிதரன் கலாசாலையின் முன்னாள் மற்றும் தற்போதைய விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள் இ வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியர் சிவகுமார், முன்னாள் ஆசிரிய மாணவர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் இ மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கிலேயே உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைத்தோம். இதற்கு எவ்வித நிபந்தனையும் இன்றியே சில தரப்புகள் ஆதரவு அளித்தன.

ஆட்சி அமைப்பதற்காக நாம் எந்தவொரு டீலிலும் ஈடுபடவில்லை. எவ்வித ஒப்பந்தமும் கிடையாது. மக்கள் வழங்கிய ஆணையை மதித்தே செயற்பட்டு வருகின்றோம்.

மலையகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நிச்சயம் விசாரணைகள் இடம்பெறும். எவரேனும் குற்றம் இழைத்திருந்தால் சட்டத்தின் பிரகாரம் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். எமது ஆட்சியில் குற்றவாளிகள் தப்ப முடியாது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் வெகுவிரைவில் தலையிட்டு அரசுத் தலைவர் தீர்வை வழங்குவார். உள்ளக மட்டத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அரசுத் தலைவர் மிக விரைவில் நடவடிக்கை எடுப்பார். சிலவேளை அரசாங்கமும் இதற்குரிய தீர்வை வழங்கலாம் என்றார்.

## கழிவுகளைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் அடிப்படை ஆட்சிக் கோட்பாடுகளான சுற்றாடல்சார் நீதியும், நியாயமும் நிலைபெறுதகு வளப்பாவனையும், முன்கூட்டிய பாதுகாப்பு முறையியலும் சூழற்தொகுதிசார் அணுகுமுறை சுற்றாடல்சார் நல்லாட்சி, சுற்றாடல்சார் பாதுகாப்பு ஆகியவற்றையும் இச் செயல்திட்டம் மீறுகின்றது.

தற்போதைய அரசுத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஆதரவளித்து நிறைவேற்றிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தேவைப்பாடுகளையும் மீறும் விதமாக, இச் செயல்திட்டம் தொடர்பான விபரங்கள் எதுவும் மக்களுடன் பகிரப்படாமல், மிக இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காரைமுனங்கு பகுதியில் திண்மக் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையத்தை அமைப்பதற்காகக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசம், கிழக்கு அரியாலை கடற்பகுதியினை இணைக்கின்ற பிரதான பாதையில் உள்ளது. யாழ் நகரத்தினை அண்டிய பகுதியில் உள்ள, மக்கள் தக்களுடைய ஓய்வு நேரத்தினை குடும்பத்துடன் கழிக்கக்கூடிய பகுதியாக இது அமைந்துள்ளது.

வாழ்க்கைச்சுமையினால் வதங்குகின்ற எம் மக்கள், குடும்பத்துடன் சென்று இளைப்பாறுகின்ற இப் பகுதியில் திண்மக் கழிவகற்றும் நிலையம் அமைக்கப்படுவது, பொருளாதாரச்செலவின்றி இளைப்பாறக்கூடிய யாழ் நகருக்கு அருகாமையில் ஒரேயொரு இடமாக அமைந்துள்ள இப் பிரதேசத்தினை மக்கள் பாவனைக்கு பொருத்தமற்ற இடமாக மாற்றிவிடும்.

காரைமுனங்கு பிரதேசம் கடல் நீரேரியை அண்டியபிரதேசமாகஉள்ளதனால், புலம்பெயர் பறவைகள் (துஷ்ஆஷழிஐஜமி ஞுஷ்ஷ-வி) உட்பட பல உயிரினங்கள் வாழுகின்ற உயிர்ப்பல்வகைத்தனைமை (ஞுஷ்லி-ஷ்-ஸஎஷவிஷ்மிதீ) செறிந்த இடமாகவும் இது அமைந்துள்ளது. இப் பகுதியினை நல்லூர் பிரதேசசெயலகத்தினர் பார்வையிட்டு, இன்று இப்பகுதிபறவைகளைப்பார்வையிடுவதற்கான பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலை கிராமத்தின் வேறு பகுதிகளில் வாழ்பவர்கள் உட்பட, இப் பிரதேசத்தில் வாழுகின்ற பலரும், வேறு முழு-நேர உத்தியோகங்களில் ஈடுபட்டாலும், தங்களுடைய பரம்பரை வயல் மற்றும் தோட்டகாணிகளில், தங்களின் பெற்றோர்களும், முன்னோர்களும் முன்னெடுத்த முயற்சியின் தொடர்ச்சியாக, இந் நிலங்களில் பயிரிட்டு வருகின்றனர். இவ் வயல் மற்றும் தோட்ட நிலங்கள் எமக்கும், மூதாதையர்களுக்குமான தொப்புள்கொடியாக இருந்து வருகின்றன.

இப்பிரதேசத்தில்வாழுகின்றமக்களுக்கான பொது மயானம் (சுடுகாடு மற்றும் இடுகாடு) அமைந்துள்ள பகுதியிலேயே இந் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு ஏற்கனவே பொது மயானங்களுக்கு அருகாமையில் நிறுவப்பட்ட திண்மக்கழிவகற்றல் நிலையங்கள் சரியான நிர்வாக, சூழலியல் தேவைப்பாடுகளை கருத்திலெடுத்து அமைக்கப்படாததனாலும், சரியான முறையில் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படாததனாலும், இன்று அம் மயானங்கள் சீரழிந்து காணப்படுகின்றன. இந் நிலை எம் உறவினர்களின் நினைவுகளைத் தாங்கிநிற்கின்றகாறைமுனங்குமயானத்திற்கும் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், நாவலடி ஆகிய கிராமங்கள் யாழ் நகரிலிருந்து வெறும் 10 வது தொலைவில் அமைந்திருந்தாலும், வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் போது உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தொடர்ச்சியாக உள்வாங்கப்பட்டிருந்ததனாலும், கண்ணிவெடிகளினால் நிரம்பியிருந்ததினாலும், மக்களின் நடமாட்டம் குறைந்த ஒதுக்குப்புறமான பகுதியாகக் காணப்பட்டு, இன்று படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றது.

இச் சூழ்நிலை, சுற்றுலாத்துறையினை அடிப்படையாகக் கொண்டு பெருமளவில் அபிவிருத்தி அடையக்கூடிய வளங்களைக் கொண்டுள்ளபோதும், துரதிர்ஷ்டவசமாக, ஒரு ஒதுக்குப்புறமான பிரதேசமாக ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற மக்களாலும், குறிப்பாக அரச நிறுவனங்களாலும் அடையாளப்படுத்தப்பட்டுவிட்டது. இருப்பினும், இப்பகுதியில் வாழுகின்ற மக்கள் தங்களுடைய விடாமுயற்சியினாலும், கிராம மக்களின் உதவியினாலும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தினை சிறிது சிறிதாக மேம்படுத்தி வருகின்றனர். இச் சந்தர்ப்பத்தில், இப் பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான பாதையில் கழிவகற்றும் நிலையத்தினை உருவாக்குவது, இப் பிரதேச மக்களின் வாழ்வாதார முயற்சிகளை முறியடிக்கும்.

எம் ஊரினைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள், தற்போது படிப்படியாக எமது கிராமத்தினை அபிவிருத்தி செய்கின்ற முயற்சிகளை, எம் கிராமத்து மக்களின் உறுதுணையோடு முன்னெடுத்து வருகின்றனர். இதன் பயனாக, இன்று இங்கு சில சொகுசு வீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை உள்ளு ர் மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பினையும் வழங்கியுள்ளது.

எமது கிராம மக்கள் ஏற்கனவே, எமது கிராமத்தினை அபிவிருத்தி செய்வதற்காக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவற்றில், அரியாலை கிழக்குப் பகுதியினை மையப்படுத்திய சுற்றுலாத்துறை அபிவிருத்தி முதன்மையானதாகும். பசுமைசார் சுற்றுலா (றூஷளஎஜ மிலிற்ஷஷ்விது) மற்றும் சூழல்சார் சுற்றுலா (சிஉலி மிலிற்ஷ-ஷ்விது) செயல்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தென்னிலங்கை மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை சிறிது சிறிதாக எம்முடைய கிராமம் கவர்ந்து வருகின்றது. இதன் மூலம் உள்ளு ர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு எம் மக்கள் முயற்சித்து வருகின்றனர்.

துவிச்சக்கரவண்டிசுற்றுலா (ஏதீஉயிஷஆ வீலிற்ஷ)

பராமரிப்பு மற்றும் விளைச்சல் சுற்றுலா (கூழிஷிஸஎவிமிஷ்ஜஆ வீலிற்ஷ)

பால்மைரா தயாரிப்பு தயாரிப்பு) படகுச் சவாரி (யலிழிமிபூஷ்-ஷஜஆ)

வீட்டில் தங்குதல் (கூழிலிதுஎ நீமிழிதீ)

உள்ளுர்க்கலாசார அனுபவம் (ஸிலிஉழியி உற்யிமிற்ஷஎ எமுஞ்ஸஎஷ்ஜஉஎ)

இவ்வாறு பல சூழலியல், சமூகவியல் முக்கியத்துவங்களைக் கொண்டதும், எமது ஊரினதும், எமது மாவட்டத்தினதும் அபிவிருத்திக்கு பொருளாதார ரீதியில் கணிசமான பங்களிப்பினை வழங்கக்கூடிய வளங்களையும், வாய்ப்புகளையும் கொண்டிருக்கின்ற அரியாலை கிழக்கு பகுதி, குறித்த திண்மக்கழிவுகளைத் தரம் பிரிக்கும் நிலையத்தை அமைப்பது, நிரந்தரமான பாதிப்பினை இங்கிருக்கும் மக்களுக்கும், சுற்றாடலுக்கும் ஏற்படுத்தும் என்பதனைக் கருத்திற்கொண்டு, குறித்த திட்டத்தினை இரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் பணிக்குமாறு மதிப்புக்குரிய இணைத் தலைவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதே சந்தர்ப்பத்தில், இப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை, எம் மக்களுடனான கலந்துரையாடலுடன் முன்னெடுக்குமாறும், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் செயல்திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம் என்றுள்ளது.

# அமெ. வரியிலிருந்து இலங்கையை காக்க துரித இராஜதந்திர அணுகுமுறைவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பின் கீழ் இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிக்கப் படவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் எமக்கு அமெரிக்க சந்தையில் பெரும் போட்டி நிலைமை ஏற்படும். எனவே இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான இராஜதந்திர அணுகுமுறைகளை ஆளும்தரப்பு துரிதமாக ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள தீர்வைவரி ஆடை இறக்குமதி 30 சதவீதத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்படமாட்டாது. அமெரிக்காவுக்கே அதிகளவான ஆடை ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே தீர்வை வரியை மேலும் குறைப்பதற்கான பேச்சு நடத்தப்படவேண்டும். இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படவுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் எமக்கு அமெரிக்க சந்தையில் பெரும் போட்டி நிலைமை ஏற்படும்.

பிரித்தானியா அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. இதனை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஆளும்தரப்பு இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். எவ்வாறு இத்தகைய தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படும் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. இலங்கைக்கு மாத்திரமின்றி தென்னாசிய நாடுகள் பலவற்றுக்கும் பிரித்தானியா இந்த வாய்ப்பினை வழங்கியிருக்கிறது.

அவ்வாறெனில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் போன்ற ஏனைய நாடுகளுடனும் போட்டித்தன்மையை எதிர்கொள்ள நேரிடும். எனவே ஏற்றுமதிச் சந்தைகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்ளவேண்டும் என்பதோடு, அமெரிக்காவுடனான பேச்சுக்களையும் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும். பொருளாதார நெருக்கடிகளில் சிக்கிக்கொள்ளாது நாட்டைப் பாதுகாப்பதற்கு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஆளும்தரப்புக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஜேவிபி தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற நாமத்தில் வலம் வந்து கொண்டிருந்தாலும், அன்று ஆளும்தரப்புக்குஎடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்திய கட்சிதான். அது மாத்திரமின்றி வன்முறைகளிலும் ஈடுபட்டிருக்கிறது. ஆனால் நாம் ஒருபோதும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடப் போவதில்லை. அன்று எதிர்க்கட்சியாக ஜே.வி.பி. செயற்பட்ட விதத்துக்கும், இன்று எதிர்க்கட்சியாக நாம் செயற்படும் விதத்துக்கும் இடையிலான வேறுபாட்டை தற்போது மக்களால் உணரக் கூடியதாக இருக்கும் என்றார்.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் செய்யமுடியாது என்பதால், இந்த விவகாரங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்படவேண்டும் அல்லது இலங்கைத் தொடர்பில் குற்றவியல் தீர்ப்பாயம் உருவாக்கப்பட்டுபாரப்படுத்தப்பட்டு முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியிருந்தோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் பேரவையின் ஆணையாளர் கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்தபோது தமிழ்க் கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக தலைவர்கள், செயற்பாட்டாளர்களின் ஒப்புதலோடு ஒரு கடிதத்தை அவரிடம் வழங்கினோம். அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கையொப்பமிட்டிருந்தார்.

அந்தக் கடிதம் வழங்கப்பட்ட அடுத்த வாரமே இலங்கை தமிழ் அரசுக் கட்சித் தலைவரும் பொதுச்செயலாளரும் செம்மணி விவகாரத்தில் இலங்கை

ஆளும்தரப்பு அந்த விசாரணை நடத்துவதற்குரிய அங்கீகாரத்தை வழங்கி ஒரு கடிதத்தை வழங்கியிருக்கின்றது. அதற்கு மேலதிகமாக ஒரு சில சர்வதேச தரப்புகளின் கண்காணிப்போடு செய்வதற்குரிய ஆலோசனைகளையும் அந்தக் கடிதத்தில் வழங்கி இருக்கிறார்கள். இது நேருக்கு நேர் முரண்பட்ட நிலைப்பாடு.

செம்மணியில் நடந்தது அநியாயம். இலங்கை அரசு இதனை மூடி மறைக்க முயற்சித்த நிலையில், எதேர்ச்சியாக தற்போது வெளி வந்திருக்கிறது. தற்போது வெளிவரும் ஆதாரங்களையும் மூடி மறைக்கின்ற சந்தர்ப்பங்களை நீங்கள் வழங்குகிறீர்கள் என்பதாகவே இந்தக் கடிதத்தைப் பார்க்கவேண்டியுள்ளது.

இதனால்தான் அடுத்தவார இறுதியில் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களையும் மனித உரிமை அமைப்புகளையும் ஒரிடத்தில் சந்தித்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் அதில் கையெழுத்திட்ட எவரும் பின்வாங்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தவுள்ளோம்.

இந்தக் கூட்டத்திற்கான உத்தியோகபூர்வ அழைப்பு அனைத்து தரப்பினருக்கும் அனுப்பப்படும். இது தொடர்பில் மக்களுக்கு தெளிவு இருக்கவேண்டும் என்பதற்காக ஊடகங்களையும் நாங்கள் சந்தித்து வருகிறோம்.

இலங்கையில் தமிழினம் இந்தளவுக்கு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டதற்கான முழுமையான நீதித்தையும் பெறவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இனப்படுகொலை நடக்கவில்லை. அது 1948இல் இருந்து நடக்கிறது. அது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாக இடம்பெற்றது. நேரடியாகவும் நடைபெற்றது. உண்மையான நீதியாயத்தை பெறக்கூடியதான ஓர் அணுகுமுறையை உறுதிப்படுத்துவதற்காக இந்த முயற்சியைச் செய்யவிருக்கிறோம்.

எந்த ஒரு கட்சியும் இந்த முடிவுக்கு இணங்கிவிட்டு வேறுபட்ட நிலைப்பாட்டை எடுக்க முடியாது. இலங்கை தமிழ் அரசுக் கட்சி எடுத்த முடிவை போல வேறு எவரும் செய்யக்கூடாது என்பதற்காகவே நாங்கள் இந்த முயற்சியை அவசரமாக செய்ய இருக்கிறோம்.

செம்மணி எந்தளவுக்கு இன்று முக்கியத்துவம் பெற்றிருக்கிறதோ, போர் நடைபெற்ற காலப்பகுதியில் நடைபெற்றவை மாத்திரமல்ல அநியாயங்கள்.

ஒட்டுமொத்தமாக 1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்தேசத்திற்கு நடைபெற்ற முழு அநியாயமும் இனப்படுகொலையும் செயற்பாடுகளையும் ஒரே சந்தர்ப்பத்திலே விசாரிக்கப்பட்டால் மட்டுமே உண்மையான யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு அந்த அடிப்படையில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் சரியாக விசாரணை செய்யவேண்டும்.

ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாக அமையவேண்டும் என நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எது இப்போது அவசியம்?

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆளும்தப்புடன் பேச்சு நடத்தும் போதெல்லாம் ஒரு விடயத்தில் மிகப் பிடிவாதமாக இருப்பார்கள். உடனடித் தீர்வு மற்றும் நிரந்தரத் தீர்வு. விடுதலைப் போராட்டத்திற்கான நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசப்படும் அதேநேரத்தின் மக்களின் பிரச்சினைக்கான உடனடித் தீர்வுகளையும் அவர்கள் வலியுறுத்துவார்கள். மக்கள் நலனில் அவர்களுக்கு அக்கறை இருந்ததன் காரணமாக, போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதிலிருந்து மீண்டுவருவதற்கான வழிவாய்ப்புக்களை அவர்கள் இந்த உடனடித் தீர்வுகள் மூலமாக வலியுறுத்துவார்கள்.

தற்போது இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் முன்னெடுத்துள்ள அரசியல் போக்கு, புலிகளின் அணுகுமுறையின் மீதான மீள்பார்வையை அவசியமாக்கியிருக்கிறது. கஜேந்திரகுமார் என்ன சொல்கிறார் என்றால் செம்மணி, இறுதிப் போர்க் காலக் குற்றங்கள் என்று தனித்தனியாக விசாரணைகளுக்குச் செல்லாமல், 1948 முதல் தமிழர்கள் மீதான அனைத்துக் குற்றங்களும் ஒன்றாக விசாரிக்கப்படவேண்டும். அதுவும் சர்வதேச விசாரணை ஊடாக இது முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

அதேவேளை, தமிழ் அரசுக் கட்சி கடந்த வாரம் இலங்கையின் அரசுத் தலைவர் அநுரவுக்கு எழுதிய கடிதத்தில், உள்ளக விசாரணைக்கு இடமளிக்க தயார் என்பதைத் தெரிவித்திருந்தாகவும், இது சர்வதேச விசாரணைக்கு முற்றிலும் முரணான நிலைப்பாடு என்றும் அப்படி ஒருபோதும் கேட்கவேகூடாது என்றும் அவர் தெரிவிக்கிறார். இதனைத் திருத்திப் பார்க்கும்பொழுது, தமிழர் அரசியல் அணிகளுக்குள் ஒருமித்தப் பார்வை இல்லை என்பதும், அவை எதிர்பார்க்கும் நீதி நெறிகளில் தெளிவு இல்லை என்பதும் புலப்படுகிறது.

இன்றைய உலக ஒழுங்கில், சர்வதேச விசாரணை என்பது எளிதில் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC), ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சிக்கலான நடைமுறைகள், உறுப்பு நாடுகளின் புறச்சார்பு அரசியல் என்ன சர்வதேச விசாரணையை மிகவும் சிக்கலானதாக்கியுள்ளன. (all combine to make such inquiries complex and rar) மிக முக்கியமாக, இலங்கை ஆளும்தரப்பின் ஒப்புதல் இன்றி, சட்டரீதியான சர்வதேச விசாரணை நடைபெற முடியாது.

எனவே, பன்னாட்டுத் தீர்வுகளுக்குப் பின் நோக்கி நகரும் முயற்சிகளில், தமிழ்த் தலைமையிலான கட்சிகள் தங்கள் கோரிக்கைகள், திட்டங்கள் மற்றும் நடைமுறைகள் ஒத்த கருத்தையும் அதுநேரத்தில் நடைமுறைச் சாத்தியத்தையும் கொண்டிருக்கவேண்டியது அவசியம். விடுதலைப் புலிகளின் பாணியில் சொன்னால் நிரந்தரத் தீர்வு நோக்கி நகரும் அதேநேரம் உடனடித் தீர்வு குறித்தும் கவனம் செலுத்தவேண்டும். பொதுவாகக் கோரப்படும் "சர்வதேச விசாரணை" என்பது பலர் எதிர்பார்ப்பது போல உடனடி தீர்வாக அமையாது. அது ஒரு நீண்ட நடைமுறை.

இந்நிலையில், கஜேந்திரகுமாரின் கோரிக்கை—"முழுமையான சர்வதேச விசாரணை" — என்பது நீதிமன்ற நோக்கில் முழுமையை எதிர்பார்த்தாலும், நடைமுறையில் அது சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில், புறநோக்கங்களுடன் கூடிய பன்னாட்டு நாட்டு அரசியல்கள், அதிகாரப்பூர்வமான விசாரணைகளுக்கு இடையூறாகத் திகழ்கின்றன.

அதனால்தான், தெளிவான திட்டம், ஒன்றுபட்ட தமிழரசியல் நிலைப்பாடு, சர்வதேச சட்ட நெறிகள் குறித்து தெளிந்த புரிதல் ஆகியவை இன்றியமையாதவை. 2009 இறுதிப் போர், செம்மணி போன்ற மனித உரிமை மீறல்கள் அனைத்தும் ஒரு தொடர் குற்றச் செயல்களாகவே பார்க்கப்பட வேண்டும் என்பது நிச்சயம். ஆனால், அதற்கான போராட்டம் வழிகாட்டியுடன் இருக்க வேண்டும்.

இதேவேளை, தமிழர்கள் எதிர்கொள்ளும் நீதி மிக்க எதிர்காலம், உணர்வூட்டும் முழக்கங்களால் அல்ல, திட்டமிட்ட நடவடிக்கைகளால் மட்டுமே அடையக்கூடியது என்பதை தமிழ் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

# மொடல் அழகி பியூமியின் மகன் கைதாகி பிணையில் விடுவிப்பு

கொழும்பு ராஜகிரிய பகுதியில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் வெலிகட பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நடிகையும் பிரபல மொடல் அழகியுமான பியுமி ஹங்சமாலியின் மகன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று பிற்பகல் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேலதிக நீதிவான் மொஹமட் ரிஸ்வான் அனுமதித்தார். இதற்கமைய சந்தேகநபர் 5 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நடிகையும் பிரபல மொடல் அழகியுமான பியுமி ஹங்சமாலியின் மகன் காவிங்க என்பவரது நெருங்கிய உறவினர் ஒருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கொழும்பு ராஜகிரிய கலபலுவாவ பிரதேசத்தில் வைத்து நேற்று அதிகாலை முச்சக்கரவண்டியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த சந்தேகநபரான பியுமி ஹங்சமாலியின் மகன் உள்ளிட்ட கும்பல் குறித்த முச்சக்கரவண்டி சாரதி மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான உதயகுமார வுட்லர் தெரிவித்தார்.

சம்பவத்தின் போது தாக்குதலுக்கு இலக்கான முச்சக்கரவண்டி சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய மேலதிக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விசாரணை அதிகாரிகள் மன்றில் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 15 வயதுடைய ஒருவர் என விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் முறைப்பாட்டு தரப்பு மற்றும் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான் சந்தேகநபரை பிணையில் விடுவிக்க உத்தரவு பிறப்பித்தார்.

# கிளிநொச்சியில் நடந்த தேடுதல்களில் 4 சந்தேகநபர்கள் கடற்படையால் கைது

கிளிநொச்சியின் டெவில்ஸ் பொயிண்ட் கடலோரப் பகுதியில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, நான்கு சந்தேகநபர்களும் இரண்டு (02) வாகனங்களும் சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு போக்குவரத்துக்குத் தயாராக இருந்த மசாலாப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்துகளின் ஒரு தொகுதியுடன் 2025 ஜூலை 11ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத கடல்சார் கடத்தல் காரணமாக சட்டபூர்வமான வணிகங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் நீண்டகால பாதகமான தாக்கத்தைத் தடுக்கவும், கடலின் சட்டப்பூர்வ பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும், தீவைச் சுற்றியுள்ள கடற்கரை மற்றும் கடற்பரப்பை உள்ளடக்கிய வழக்கமான ரோந்து மற்றும் தேடல் நடவடிக்கைகளை கடற்படை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, 2025 ஜூலை 11 ஆம் திகதி வட மத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் புவனேகவால் கிளிநொச்சி, லோக்கன்னாவாடிய மற்றும் டெவில்ஸ் பொயிண்ட் கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடல் நடவடிக்கையின் போது, மேற்படி கடலோரப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான இரண்டு (02) வாடகை வண்டிகள் கண்காணிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டன. சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு போக்குவரத்துக்காக தயாரிக்கப்பட்ட 300 கிலோகிராம் ஏலக்காய், 260 கிலோகிராம் மஞ்சள் தூள், 273 கிலோகிராம் உலர்ந்த இஞ்சி, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட மசாலாப் பொருட்களுடன் இரண்டு (02) வாடகை வண்டிகள் மற்றும் நான்கு (04) சந்தேக நபர்களையும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 39 முதல் 49 வயதுக்குட்பட்ட எரக்கண்டி, கல்முனைகுடி, திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடற்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு (04) சந்தேக நபர்களும், மசாலாப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள் மற்றும் இரண்டு (02) வாடகை வண்டிகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை சுங்கத்தடுப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

# புலம்பெயர் தொழிலாளர்கள் மூலம் ஜூன் மாதத்தில் 635 மில். டொலர்

2025 ஜூன் மாதத்தில் இலங்கைக்கு 635.7 மில்லியன் அமெரிக்க டொலர் புலம்பெயர் தொழிலாளர் பணவனுப்பல் பெறப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட புதிய புள்ளிவிவரங்களின்படி, இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 22% அதிகரிப்பாகும்.

2025 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலப்பகுதியில் மொத்த மதிப்பு 3.7 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளதுடன், இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 18.9% அதிகரிப்பு என இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கிறது.

2024 ஆம் ஆண்டிற்கான மொத்த புலம்பெயர் தொழிலாளர் பணவனுப்பல் 6.57 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

அதிகாரபூர்வ தரவுகளின்படி, இந்த ஆண்டு இதுவரை 312,836 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# சீன அயலுறவுத்துறை அமைச்சருடன் அமைச்சர் விஜித்த ஹேரத் சந்திப்பு

## மலேசியாவில் நடந்தது



மலேசியாவில் நடைபெற்ற அயலுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சீன அயலுறவுத்துறைத்துறை அமைச்சர் வாங் யி இடையே சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் மூலோபாய ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இரு அயலுறவுத்துறை அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போது, இலங்கைக்கு சீனா அளித்த ஆதரவுக்கு, குறிப்பாக இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில், மற்றும் சமீபத்திய பொருளாதார சவால்களின் போது சீனா வழங்கிய ஒத்துழைப்புக்கு அமைச்சர் விஜித ஹேரத் நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவு நாட்டின் வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் விஜித ஹேரத் இதன் போது தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஒரு மண்டலம், ஒரு பாதை கொள்கையில் இலங்கையின் ஆர்வத்தை அமைச்சர் மீண்டும் உறுதிப்படுத்தினார், மேலும் வர்த்தகம், முதலீடு, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கடல்சார் விவகாரங்கள் போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த இலங்கையின் தயார்நிலையையும் அவர் இதன் போது வெளிப்படுத்தினார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற பயனுள்ள கலந்துரையாடல்கள் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், ஒப்புக் கொள்ளப்பட்ட பொதுவான தொலைநோக்குப் பார்வையைசெயல்படுத்தசீனாவுடன்நெருக்கமாகப் பணியாற்ற இலங்கை ஆர்வமாக இருப்பதாகவும் கூறினார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கு மூலோபாய மதிப்புள்ள கொழும்புதுறைமுகநகரம்மற்றும்அம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்டவற்றுக்கான ஒத்துழைப்பை விரைவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, டிஜிட்டல் பொருளாதாரம், விவசாயம் மற்றும் கடல்சார் துறை போன்ற அதிநவீன துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர், மேலும் சீன அயலுறவுத்துறை அமைச்சருக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கையை அமைச்சர் வெளிப்படுத்தினார்.









# மேலும் வரிக் குறைப்பை எதிர்பார்த்து 2 வாரங்களில் அமெரிக்காவிற்கு குழு

## முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

அமெரிக்காஇலங்கைப்பொருட்கள்மீதுவிதித்துள்ள 30 சதவீத வரியை மேலும் குறைப்பது தொடர்பில் பேச இன்னும் இரு வாரங்களில் தூதுக்குழு ஒன்று அங்கு செல்லவுள்ளது.

இலங்கை மீதான புதிய பரஸ்பர வரியை அமெரிக்கா ஜூலை 9 அதிகாரப்பூர்வமாக 30 சதவீதமாக அறிவித்தது. முதலில் 44 சதவீதமாக அறிவிக்கப்பட்ட இந்த வரி இலங்கைக்குழு அமெரிக்கா சென்று நடத்திய பேச்சின் விளைவாக 14 சதவீதம் குறைக்கப்பட்டது.

புதிய வரி ஓகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும் எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கமைய, அமெரிக்காவிடமிருந்து வரிச் சலுகைகளைப் பெறுவதற்காக ஓகஸ்ட் 1 ஆம் திகதிக்கு முன்னர் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள இலங்கை தீர்மானித்துள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பங்கேற்க இலங்கை பிரதிநிதிகள் குழு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமெரிக்கா செல்லவுள்ளதாகவும், வெள்ளிக்கிழமை அரசுத் தலைவருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டதாகவும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது அமெரிக்க பொருட்களின் இறக்குமதி குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்று மங்கள விஜேசிங்க மேலும் தெரிவித்தார்.

### நீதிமன்றக் கொலை வழக்கு சந்தேகநபரான

# செவ்வந்தியின் தாயார் சிறையில் உயிரிழப்பு

கணேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேகநபரான தேடப்பட்டு வரும் இஷாரா செவ்வந்தியின் தாயார் வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இஷாரா செவ்வந்தியின் தாயார் கடந்த 11ஆம்திகதி மாரடைப்பால் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஞ்சீவ குமார சமர ரத்ன என்னும் கணேமுல்ல சஞ்சீவ புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் பிரதான சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியின் தாயார் மற்றும் சகோதரர் ஆகியோர் குற்றச்செலுக்கு உதவிய குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

செத்புர தேவகே சமந்தி என நீதிமன்றத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியின் தாயார் 4 மாதங்களுக்கும் மேல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததுடன் கடந்த வெள்ளிக்கிழமை (11) வெளிக்கடை மெகசின் சிறைச்சாலையினுள் மாரடைப்பால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் பெப்ரவரி 24 ஆம் திகதி இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் சகோதரர் ஆகியோர் கைது செய்யப்பட்டு 25 ஆம் திகதி கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதப் புதைகுழிகள் குறித்து உடனடி விசாரணை வேண்டும்

## யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணையம் வலியுறுத்து

அடையாளம் காணப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் காலம் தாழ்த்தாது விசாரணைகளை விரிவுபடுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கவேண்டும் என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த இணையத்தின் தலைவர் சுகிர்தராஜ் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது இணையம் 22 அமைப்புக்களை ஒன்றிணைத்து மனித உயிர்களின் பாதுகாப்புக்காக குரல் கொடுத்து வருகிறது.

தற்போது வடக்கில் பல மனித அவலங்கள் நிகழ்த்தப்பட்டதற்கான புதைகுழிகள் இனங்காணப்பட்டு அவை அகழப்பட்டு அதிகளவான மனித என்புக்கூடுகள் மீட்கப்புள்ளன. எமது ஒன்றியம் போர்க் காலங்கள் தொட்டு நீண்டகாலமாகவே மனித உரிமைகள், சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு என்பவற்றை வலியுறுத்திக் குரல் கொடுத்து வந்திருக்கிறது. ஆளும் தரப்புகளுக்கு பெரும் அழுத்தத்தைக் கொடுத்து வந்திருக்கிறது. அந்த வகையில் தற்போதைய பேசுபொருளான மனிதப் புதைகுழி விவகாரத்துக்கும் உடன் விசாரணை மேற்கொடு நியாயம் கிடைக்க செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அண்மையில் கொழும்பில் மர்மமான முறையில் இறந்த பாடசாலை மாணவியின் இறப்புத் தொடர்பிலும் விசாரணை செய்யப்படு உண்மை வெளிக்கொண்டுவரப்படவேண்டும் என கோருகிறோம் என்றார்.

# ரம்புட்டான், மங்குஸ்தான் தோல்களை எறியாதீர்கள்

## அதனால் டெங்கு நுளம்பு பெருகும்

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் குழந்தை மருத்துவநிபுணர் டாக்டர் தீபால் பெரேரா, ரம்புட்டான் மற்றும் மாம்பழத் தோல்கள் டெங்கு இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக மாறக்கூடும் என்பதால் அவற்றைத் தூக்கி எறிவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார்.

மாம்பழப் பருவம் தற்போது நடைபெற்று வருவதால், மக்கள் இந்தப் பழங்களின் தோல்களை தூக்கி எறிவதைக் கவனித்ததால்தான் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கிறார் என்று அவர் மேலும் கூறினார்.

பழத்தோல் போன்ற ஒரு சிறிய இடம்கூட டெங்கு லார்வாக்கள் இனப்பெருக்கம் செய்ய போதுமானது என்று தீபால் பெரேரா கூறினார்.



காலைக்கதிர் Kalaikkathir

# போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினர் மீது இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் இல்லை

## சீறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினர் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக தமிழர் தரப்பை குற்றவாளியாக காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

கொட்டகலையில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் உட்பட சில விடயங்களை தமிழ் தரப்புகள்தான் செய்தன என்பதுபோல் வெளியில் ஒரு மாயை காட்டப்படுகின்றது. இதற்குப்பின்னால்இருந்த ஆட்சி அமைத்த கோட்டாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த குடும்பம் மீது இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் ஆளும்தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை.

இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களை செய்த இராணுவத் தளபதிகள் மீதோ அல்லது அதனை மேற்கொண்ட ஆட்சியாளர்கள் மீதோ எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் தமிழ் தரப்பை குற்றவாளியாக காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது. இது தொடர்பில் நாம் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுப் 10 பரம்பரைகள் ஆகிவிட்டபோதும் மலையக மக்களுக்கு ஒரு துண்டு காணிகூட இன்னும் வழங்கப்படவில்லை. மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக இம்மண்ணில் வாழ்கின்றனர். நபரொருவர், பிரிட்டனுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றால் அங்கு 3 அல்லது ஐந்து வருடங்களில் குடியுரிமை கிடைக்கின்றது. வீடு வழங்கப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கின்றது. ஆனால் இந்நாட்டுக்காக 10 பரம்பரையாக உழைத்த மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் காணி உரிமை அற்றவர்களாகவே உள்ளனர்.

மாறி மாறி ஆட்சிக்குவருபவர்கள் அவர்களுக்கு காணிஉரிமையைவழங்கவில்லை. ஒருகொட்டகையை அமைப்பதாகஇருந்தால்கூட நிர்வாகத்திடம் அனுமதி பெறவேண்டிய நிலமையே காணப்படுகின்றது. அவர்கள் அனுமதி வழங்காத நிலையும் நீடிக்கின்றது.

வடக்கு, கிழக்கைவிடவும் மலையகத்திலேயே காணியில்லாப் பிரச்சினை, வாழ்வியல் பிரச்சினை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை உள்ளிட்டவை அதிகளவு காணப்படுகின்றது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற நாளாந்த சம்பளம் போதுமானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாகூட போதாது. நியாயமான மற்றும் நிரந்தர சம்பளம் வழங்கப்பட வேண்டும். அதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும் - என்றார்.

# சவூதி நிதியத்தின் அதிகாரி நேற்று கொழும்பு வருகை

அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் அல் மர்ஷாட் இலங்கைக்கான உத்தியோகபூர்வமாக நேற்று வருகை தந்தார்.

சவூதி அரேபியாவின் 28 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத் தொகையில் நிர்மாணிக்கப்பட்ட வயம்ப பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்தி திட்டத்தின் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே இவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரினியின் பங்கேற்புடனான இந்த நிகழ்வு இன்று 14ஆம் திகதி திங்கட்கிழமை வயம்ப பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் கமூத் அல் கஹ்தானி மற்றும் ஆளும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர். இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 2021ஆம் ஆண்டு டிசெம்பர் 27 வயம்ப பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விலும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் ஊடாக வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டிய மற்றும் மாகுந்தர ஆகிய வளாகங்களில் மாணவர்கள்இ விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2025இல் வெளியிடப்பெற்றது